TNPSC JOB

Reg. No.:

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## வகுப்பு - 8

காலம் : 2.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்:100

### பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .........
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. பெரிய கப்பல்கள் .......... மீது செல்லும்.
   அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி
3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .....
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
4. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ......
   அ) மார்பு ஆ) தலை இ) மூக்கு ஈ) கழுத்து
5. கதிரவனின் மற்றொரு பெயர் .......
   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்
6. மரத்தின் உடையாகக் குறிப்பிடப்படுவது ....... ஆகும்.
   அ) சட்டை ஆ) பட்டை இ) மட்டை ஈ) கட்டை
7. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ........ நீட்சியாக உள்ளது.
   அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
8. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் .........
   அ) வலிமையற்றவர்கள் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
9. மறைபொருளைக் காத்தல் .......... எனப்படும்.
   அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை
10. என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் ...... இன்றி வாழ்ந்தார்.
    அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி
11. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது .....
    அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு
12. பின்வருவனவற்றுள் இறந்த கால வினைமுற்று .......
    அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
13. காட்டில் இருந்து வந்த ....... கரும்பைத் தின்றன.
    அ) முகில்கள் ஆ) வேழங்கள் இ) முழவுகள் ஈ) வேய்கள்
14. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....
    அ) கச+டற ஆ) கசட+அற இ) கசடு+உற ஈ) கசடு+அற
15. பருத்தி+எல்லாம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .......
    அ) பருத்திஎல்லாம் ஆ) பருத்தியெல்லாம் இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்

### பகுதி - II

#### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.
(21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4 x 2 = 8

16. தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?
17. முறை, பொறை என்பவற்றுக்கு கலித்தொகை கூறும் விளக்கம் யாது?

TNPSC JOB | www.tnpscjob.com

18. பனை ஓலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
19. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
20. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
21. 'படும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பகுதி - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க. 5 x 2 = 10

22. ஓவிய எழுத்து என்றால் என்ன?
23. மயங்கொலி எழுத்துகள் யாவை?
24. சரியான மரபுச் சொல்லால் நிரப்புக.
அ) கோழி ......... (கூவும்/கொக்கரிக்கும்)
ஆ) பால் ........ (பருகு/குடி)
25. உரிய தமிழ்ச்சொல் தருக.
அ) Pun ஆ) Vowel
26. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.
அ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது.
ஆ) என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
27. மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
அ) வாழையடி வாழையாக ஆ) முதலைக் கண்ணீர்
28. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) சிரம் என்பது .......... (தலை/ தளை)
ஆ) வண்டி இழுப்பது ...... (காலை/காளை)

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 x 3 = 6

29. தமிழையும் கடலையும் ஒப்பிட்டு தமிழழகனார் கூறுவன யாவை?
30. அறிவியல் கல்வி பற்றி திரு.வி.க. கூறுவன யாவை?
31. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நாள்தோறும் 45 நிமிடத்தில் மூன்று கிலோமீட்டர் நடைபயணம் 15 நிமிடம் யோகா தியானம் மூச்சுப் பயிற்சி 7 மணி நேரத் தூக்கம் நாள்தோறும் மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துதல் ஆகியன அவசியம். எங்கோ விளையும் ஆப்பிளைச் சாப்பிடுவதை விட நமது ஊரில் விளையும் கொய்யா, இலந்தை, நாவல், பப்பாளி, நெல்லி, வாழைப்பழம் ஆகியவற்றைக் காலை உணவுக்கு முன்பு சாப்பிடலாம்.

அ) நாள்தோறும் எவ்வளவு நேரம் நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும்?
ஆ) எவ்வளவு நேரம் தூங்க வேண்டும்?
இ) ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் அருந்துதல் வேண்டும்?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 3 = 6
(34 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

32. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
33. ஏட்டில் எழுதிய பழங்கதையாக முடிந்தவை எவை?
34. 'மாமழை போற்றுதும்' - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

TNPSC JOB | www.tnpscjob.com

## பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 3 = 6

35. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
36. வினைமுற்று என்றால் என்ன?
37. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25

38. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வர்ணனை செய்கிறார்?
39. உழவுத் தொழில் பற்றி தகடூர் யாத்திரை கூறுவன யாவை?
40. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
41. சொற்களை ஒழுங்குப்படுத்தி முறையான தொடர் ஆக்குக.
    அ) வட்ட எழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து
    ஆ) உலகம் தமிழ் மொழி வாழட்டும் உள்ளவரையில்
    இ) பொருள்பட இரு சிலேடை ஆகும் இலக்கியம் பாடும்
    ஈ) கழுத்து பிறக்கும் இடம் உயிர் எழுத்து ஆகும்
    உ) ஏகலை கலையை அம்பு விடும் தமிழ் என்றது
42. கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




அ) எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
ஆ) புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
இ) புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
ஈ) புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
உ) புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24

43. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)
    காப்பியக் கல்வி குறித்து திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
44. வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
    திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.
45. எனது தாய்மொழி என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)
    விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.